ஆட்டுப் பண்ணைகளுக்குத் தேவைப்படும் கால்நடைத் தீவனங்கள், சென்னை நந்தனத்திலுள்ள கோழியின ஆராய்ச்சி நிலையம், ஆவின் மற்றும் தமிழ்நாடு மாவட்ட பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்களிலிருந்துதான் வாங்கப்படுகின்றன. இத்துறையின்கீழ் கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏதும் செயல்படவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க அப்பகுதியில் தீவனத் தொழிற்சாலை அமைப்பது குறித்து, நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்றுப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 16, திரு. ந. கணபதி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

16—

கால்நடை மருத்துவமனை

***37520—திரு. ந. கணபதி:**

மாண்புமிகு கால்நடை பராமாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, நாணக்கால்மேடு பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, நாணக்கால்மேடு பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் செயற்குறிப்பில் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

திரு. ந. கணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், எனது வானூர் தொகுதிக்குட்பட்ட கிளாப்பாக்கம் ஊராட்சியிலுள்ள நாணக்கால்மேடு*

2004 ஜூலை 26]

மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் ஐந்தாயிரம் கால்நடைகள் உள்ளன. அங்குள்ள கால்நடைகள் மருத்துவ வசதிக்காக சுமார் 15 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர் தூரமுள்ள உப்புவேலூர் அல்லது முருக்கேரிக்குச் செல்ல வேண்டியிருப்பதால், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் மறுபரிசீலனை செய்து இங்குள்ள விவசாயிகளின் நலன் கருதி அடுத்த ஆண்டிலாவது ஒரு கால்நடை மருத்துவமனை அல்லது பகுதிநேர மருத்துவமனையாவது அமைத்துத் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, நாணக்கால்மேடு கிராமத்திலுள்ள மொத்தக் கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் 794 ஆகும். இதன் அருகில் ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் உப்புவேலூர் கால்நடைக் கிளை நிலையமும், பத்து கிலோ மீட்டர் தூரத்தில் கிளியனூர் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன.

ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க வேண்டுமானால், தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் நாற்பதுக்கும் மேற்பட்டிருக்க வேண்டும். உள்நோயாளி கொட்டகை வசதி இருக்க வேண்டும். ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதி இருத்தல் வேண்டும். ஒரு கால்நடை மருந்தகம் தொடங்க வேண்டுமானால், கால்நடை மருந்தகம் அமைக்கக் கோரும் கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை பத்தாயிரத்திற்கும் மேற்பட்டிருக்க வேண்டும். தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை முப்பதுக்கும் மேற்பட்டிருக்க வேண்டும். கால்நடை மருந்தகம் அமைக்கக் கோரும் இடத்திற்கும் அதன் அருகில் செயல்பட்டுவரும் கால்நடை மருந்தகத்திற்கும் இடைப்பட்ட தூரம் எட்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு மேற்பட்டிருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் தேவையான தீர்மானங்களை நிறைவேற்றித் தர வேண்டும். நாணக்கால்மேடு கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையமோ அல்லது கால்நடை மருந்தகமோ தற்போது அங்கு செயல்படாத நிலையில், நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க வழி இல்லை என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலாவது இதைப் பரிசீலிக்க...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த ஆண்டு அமைச்சர் சொல்கிற நிபந்தனைகளையெல்லாம் நிறைவேற்றுவீர்களானால், அமைத்துக் கொடுப்பார். (சிரிப்பு)

வினா எண் 17, திரு. செ. அண்ணாதுரை, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

17—

கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம்

***6974—திரு. செ. அண்ணாதுரை:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் பால் உற்பத்தியை முறையாக நெறிப்படுத்தி நடத்தும் வகையில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் தொகுதியில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் ஏதுமில்லை.

திரு. செ. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டால் இந்த ஆண்டு சங்கம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் ஏற்கெனவே 7 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.